
சாலையின் பரப்பு:

① சாலை எண்	- ① -	①$\frac{(123.88 + 123.87)}{2}$ x 10.0	=	1238.75 ச.மீ
② சாலை எண்	- ② -	②$\frac{(47.75 + 47.66)}{2}$ x 9.00	=	429.34 ச.மீ
③ சாலை எண்	- ③ -	③$\frac{(21.78 + 21.87)}{2}$ x 9.00	=	196.42 ச.மீ
④ சாலை எண்	- ④ -	④$\frac{(43.26 + 43.05)}{2}$ x 7.20	=	310.71 ச.மீ
⑤ சாலை எண்	- ⑤ -	⑤$\frac{(36.22 + 36.84)}{2}$ x 7.20	=	263.01 ச.மீ
	மூலை முடக்கு	$\frac{(1.50 \times 1.50)}{2}$ x 08	=	09.00ச.மீ
	மெத்த சாலையின் பரப்பு	:	=	2447.23ச.மீ





Signature Not Verified
Signed by: Deputy Director
Location:Dindigul
Date:2025.11.25 18:25:47

Signature Not Verified
Signed by: Village Panchayat President
Location:Dindigul
Date:2025.12.30 20:35:30

கா.தனலெட்சுமி
வரைவாளர் நிலை-III

ச.திருமுரளி
மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை-II

நகர் ஊரமைப்பு துறை -DTCP

திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழுமம் - திண்டுக்கல் மாவட்டம்

முள்ளிப்பாடி ஊராட்சி

(திட்டப் பகுதி)

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், முள்ளிப்பாடி ஊராட்சி மற்றும் கிராமம், திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம், சர்வே எண்கள்:518/22A, 518/40-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்ப எண் :DTA5J73J நாள்:29.09.2025

அளவு : 1:400

வ

குறிப்புகள்

மனைப்பிரிவின் பரப்பளவு : 2.025 ஏக்கர் (8252.00ச.மீ)

ஒதுக்கிய மனைப்பிரிவு மனைகள் : 34

மனைப்பிரிவின் எல்லை :

நிலையிலுள்ள சாலை :

மனைப்பிரிவு சாலை :

பொது ஒதுக்கீடு :

உள்ளாட்சிக்கு தற்போது ஒப்படைக்கப்பட்ட பொது ஒதுக்கீடுகள்:

1) மனைப்பிரிவு சாலையின் பரப்பு : 2447.23 ச.மீ (மூலை முடக்கு உட்பட)

2) பூங்கா ஒதுக்கீடு :
பூங்காவிற்கு தேவையான பரப்பு = 10% X (மனைப்பிரிவின் மொத்த பரப்பு - சாலையின் பரப்பு)

= 10% (8252.00- 2447.23) = 580.47ச.மீ

10% பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கான தொகை அரசாணை 18 ந.நி (ம) கு.வ.து நாள்: 04.02.2019 விதி 47 (6) (ம) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கற்றறிக்கை கடிதம் ந.க.எண்: 4367 2019-Ba2 நாள்:05.02.2020-ல் தெரிவித்துள்ளதன்படி அரசு வழிகாட்டி மதிப்பிட்டில் உள்ளபடி உரிய தொகையை உரிய கணக்கு தலைப்பில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

3) உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பரப்பு:

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு)X 0.50%

= (8252.00- 2447.23) x 0.50 % = 29.02 ச.மீ

ஒதுக்கிய பரப்பு - 33.27 ச.மீ (0.57%)

4) TANGEDCO - க்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பரப்பு:

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு)X 0.50%

= (8252.00- 2447.23) x 0.50 % = 29.02 ச.மீ

ஒதுக்கிய பரப்பு - 33.18 ச.மீ (0.57%)

மூலை முடக்கு

12மீ அகலம் வரையிலான சாலைகளுக்கு 1.50மீ X 1.50மீ விடப்பட வேண்டும்.

12மீ -க்கு மேல் உள்ள அகல சாலைகளுக்கு 4.50மீ X 4.50மீ விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள்

1. அரசாணை எண் 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020-ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களது கற்றறிக்கை ந.க.எண்.19799/2020/போ நாள் 24.12.2020-ன் படி மனைப்பிரிவு சாலைகள், மூலை முடக்கு ஆகியவையும் உள்ளாட்சிக்கும் அரசாணை எண் 18, நநி (ம) கு.வ, துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண்: 16, நநி (ம) கு.வ.துறை, நாள் : 31.01.2020-ன்படியும் பொது உபயோகம் என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை உள்ளாட்சிக்கு தனியாகவும் TANGEDCO -என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதினை மின்பிகிர்மான கழகத்திற்கு தனியாகவும் அல்லது உள்ளாட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.

2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆரஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நிலஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்படவில்லை என்றும், உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைகள் சமர்பிக்கப்பட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறிவிக்கப்பட்டால் அல்லது மனைஉட்பிரிவு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்அறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.

4. விற்பனைக்குண்டான மனைப்பிரிவுகளை விற்பனை செய்யும் போது இம்மனைப்பிரிவின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வழங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5. ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவின் வரைபடத்தை எவ்வித மாற்றம்/விடுதலின்றி மனைஉட்பிரிவு நுழைவாயிலில் 0.60மீ X 1.20மீ என்ற குறைந்தபட்ச அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரத்திரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.

6. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைஉட்பிரிவு சாலைகளின் தரம் குறித்து உரிய அலுவலரிடமிருந்து தகுதிச்சான்று பெற்றுக்கொள்ள வேண்டும்.

7. அரசாணை எண் 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 16.07.2022-ன்படி உத்தேச மனைஉட்பிரிவில் தார் சாலை, கழிவுநீர் வடிகால் மற்றும் தெருவிளக்கு அமைக்கப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

8. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களது கற்றறிக்கைபடி 'The Tamilnadu Government in G.O. MS No 112, Housing and Urban Development Department, Dated 22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise, Market, Book sell or offer for sale or Invite persons to purchase in any plot, apartment or building as the case ma be in an Real Estate project or part of it only after registering the real estate project with the TNRERA(Tamilnadu Real Estate regulatory Authority)

சிறப்பு நிபந்தனை:

நகர் ஊரமைப்புத்துறை சட்ட பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம்.இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

இம்மனைப்பிரிவு தொடர்பாக நீதிமன்றத்தில் ஏதேனும் ஆணை பெறப்படும்பட்சத்தில் அவ்வாணையின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குறிப்பு: அனைத்துஅளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது

SWP/ LPA/ DINDIGUL/ LAYOUT NO: 41/2025
SWP/LPA/DINDIGUL/ PLANNING PERMISSION NO. 49/2025

உறுப்பினர் செயலர்/துணை இயக்குநர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திண்டுக்கல் மாவட்டம்.